


# கட்டிங்... கமிஷன்... களவாணித்தனம்...

# இதுவே ரகு - சங்கத்தின் அடித்தளம்!



Forwarded

போக்குவரத்து துறையில் பணியிட
மாறுதல் களத்தில் பணியாளர்களை
துவம்சம் செய்து கொண்டிருந்த
லஞ்சலாவண்யம் என்ற காளையை
அடக்கிய வீரர் நமது போக்குவரத்து
துறை பணியாளர் ஒன்றிப்பின்
தலைவர் திரு.ரகு அவர்களுக்கு ம்
இவ்வெற்றிக்கு உறுதுணையாக
தலைவருடன் தோளோடு தோள்
கொடுத்த நமது சங்க சேனாதிபதிகள்
திரு.செந்தில்குமரன் மற்றும் திரு.
முரளிதரன் ஆகியோருக்கும்
சங்கத்தின் மகளிர் அணி திலகம்
திருமதி இராஜசுலோசனா
அவர்களுக்கும்
உள்ளம் பூரித்து சந்தோசத்தில்
இன்னமும் மூர்சித்து நடந்தது கனவா
நனவா என்று இன்னமும் சுயநினைவு
எட்டாமல் இன்று புதிய பதவியில்
பொறுப்பேற்கும் நமது சக தோழர்கள்
சார்பாகவும் அனைத்து பணியாளர்கள்
சார்பாகவும் இந்த வாழ்த்து மடலை
சமர்ப்பிக்கிறேன்.
இந்நிலை தொடர இறைவனை
வேண்டுகிறேன்.

இப்படிக்கு

சு.வைதேகி

9:46 am

சு.வைதேகி மடல்

ரகு தலைமையில் செயல்படும் ‘போலி’ பொறுப்பாளர்களின் பேச்சில் கவிழ்ந்த ரகு, அரசுக்கு எதிராக செயல்பட்டு அவர்களது ஆதரவாளர்களால் சிக்கலுக்கு மேல் சிக்கலை உருவாக்கி கொள்வதோடு இன்னமும் அரசுக்கு அவப்பெயரை ஏற்படுத்தி வரு கிறார் என்பதை அவரது ஆதரவாளரான சு.வைதேகி எழுதிய மடலே உறுதிப்படுத்துகிறது.


அதாவது ரகுவின் ஆதரவாளரான சு.வைதேகி இப்படியொரு பதிவை வெளியிடலாமா ? என்பதுதான் நமது கேள்வி மட்டும் அல்ல, பலரது கேள்வியாகவும் உள்ளது.

அதாவது கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் அமைச்சருக்கு புரோக்கராக இருந்து. ‘கட்டிங்’, ‘கமிஷன்’ என ‘களவாணித்தனம்’ பண்ணி வந்த இவர்களால் ‘விடியல்’ ஆட்சியில் எதுவுமே செய்ய முடியாமல் போனது .

அதே நேரத்தில் எழிலகத்தில் DTC நடராஜனே எல்லாவற்றையும் பதுக்கி கொள்வதில் எழுந்த பிரச்சனை யில், பொறமைகள் கொண்ட இந்த ரகுவின் டீம்கள் குரோதப் பார்வைகளை இந்த அரசு மீது வீசியது.

இதோ மேலே உள்ள மாண்புமிகு புதிய அமைச்சருடன் உள்ள புகைப்படத்தில் ரகுவின் ஆதரவாளர்களான STA–ல் பணிபுரியும் இவர்கள் மரியாதை நிமித்தமாக அமைச்சரை சந்தித்து புகைப்படம் எடுத்துக் கொண்டனர் .


அதே நேரத்தில், பழைய அமைசருக்குப் பதவியை



-3-

**Column No.7 :** Accused Detail is attached in this separate sheet.

1. Tr.A.Selvam, Motor Vehicle Inspector (Gr.I), O/o the Regional Transport Officer, Theni District.
2. Tr.K.Manivannan, Superintendent, O/o the Regional Transport Officer, Theni District.
3. Tr.A.Gobirajan, Superintendent, O/o the Regional Transport Officer, Theni District.
4. Tmt.S.Vaidehi, Accountant, O/o the Regional Transport Officer, Theni District.
5. Selvi.S.Radhika, Assistant, O/o the Regional Transport Officer, Theni District.
6. Tr.N.Vivekananthan, Assistant, O/o the Regional Transport Officer, Theni District.
7. Tr.N.G.Vinodhkumar, Junior Assistant, O/o the Regional Transport Officer, Theni District.
8. Tmt.M.Sudha, Typist, O/o the Regional Transport Officer, Theni District.
9. Tr.P.Sivakumar, Office Assistant, O/o the Regional Transport Officer, Theni District.
10. Tr.V.Senthilkumar, Programmer, O/o the Regional Transport Officer, Theni District.
11. Tr.V.Karthikeyan, ELCOT Staff, O/o the Regional Transport Officer, Theni District.
12. Tr.M.Sabarirajan, ELCOT Staff, O/o the Regional Transport Officer, Theni District.
13. Tmt.R.Chitra, ELCOT Staff, O/o the Regional Transport Officer, Theni District.



TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)

C 8092392

1. District: Theni District PS: V&AC, Theni Year: 2019 FIR No: 04/19 Date: 27.06.19
2. (i) Act: Cr.P.C. Sections: 102
(ii) Act: Prevention of Corruption Sections: 7(a)
(iii) Act: (Amendment) Act 2018 Sections:
(iv) Other Acts & Sections:
3. (a) Occurrence of Offence Day: Date from: 01.11.18 Date to: 01.11.18
Time Period: Time from: 13.00 Hrs Time to: 18.00 Hrs.
(b) Information Received at PS. Date: 27.06.19 Time: 09.00 Hrs.
(c) General Diary Reference: Entry No(s) Time:
4. Type of Information: Written/ Oral: On credible information.
5. Place of Occurrence (a) Direction and Distance from PS: About 4 Kms North West.
Beat Number: (b) Address: Regional Transport office, Theni District, Theni.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S: District:
6. Complainant /Informant (a) Name: P. Sundararajan (b) Father's/ Husband's Name: V. Pitchaimuthu
(c) Date / Year of Birth: 1965 (d) Nationality: Indian (e) Passport No:
Date of Issue: Place of Issue:
(f) Occupation: Inspector of Police (g) Address: Vigilance & Anti Corruption, Theni District.
7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
— Separate sheet enclosed —
8. Reasons for delay in reporting by the complainant / Informant:
After getting permission from the Director, Vigilance and Anti Corruption, Chennai, this Case is registered.

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.18(HCL-12)

லஞ்ச ஒழிப்பு FIR மற்றும் குற்றவாளி பட்டியலில் சு.வைதேகி பெயர் வரிசை எண் 4–ல் உள்ளது.

பிடுங்கிய நாங்கள் புதிய அமைச்சரோடு நெருங்கி விட்டோம் என மார்தட்டி வந்த இவர்கள் புதிய அமைச்சரோடு எடுத்த அந்த புகைப்படத்தை வைரலாக்கி வந்தனர்.

அரசுக்கு எதிராக செயல்படும் இவர்கள் விடியல் ஆட்சிக்கு களங்கத்தை ஏற்படுத்தி வருகிறார்கள் என்பதையும் அரசின் விதி களையும் மீறியதால் உரிய நடவடிக்கை எடுக்க கோரினோம்.

இந்த நிலையில் ரகு மற்றும் ரகுவின் ஆதரவாளர்களும் நமக்கு எதிராக புகார் கொடுத்து வருவதோடு நம்மை மிரட்டியும் வருகின்றனர். ஆனாலும் நாம் இவர்கள் அரசுக்கு எதிராக செயல்பட்ட அனைத்து ஆதாரங்களையும் பதிவிட்டு மின்னஞ்சலிலும், தாபாலிலும் அரசு செயலர்கள் மற்றும் உயர் காவல் துறை அதிகாரிகள் மற்றும் லஞ்ச ஒழிப்பு துறையினர் என சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனைவருக்கும் நாமும் புகார்களை பதிவு செய்துதான் வந்துள்ளோம். எதையும் எதிர் கொள்ள தயாராக இருப்பதால்தான் உண்மை களை உரக்க சொல்லுகிறோம்.

இந்த தருணத்தில் ரகுவின் ஆதரவாளரான, STA–ல் பணி புரிந்து வந்த சு.வைதேகி இப்படி யொரு அறிக்கையினை வழங்கி அரசிற்கு களங்கத்தை ஏற்படுத்தியது எங்கள் சங்கம் தான் என அழுத்தி சொல்லாமல் அதனை உறுதிபடுத்தியுள்ளார்.

(பார்க்க: சு. வைதேகி–யின் அறிக்கை) வாட்ஸ் ஆஃப் செயலின் மூலம் அவர் வெளி யிட்டிருக்கும் மடலில்.....)

அதாவது ‘‘பணியிட மாறுதல்களில் பணியாளர்களை துவம்சம் செய்து கொண்டிருந்த லஞ்சம் லாவண்யம் என்ற காளையை அடக்கிய வீரர் ரகு மற்றும் சங்கத்தின் சேனாதிபதிகளுக்கும் (போலி பொறுப்பாளர்கள்) நன்றி தெரிவித்து வாழ்த்து மடலை பதிவு செய்து நாங்கள் அரசுக்கு எதிரானவர்கள் என்ற உண்மையை ஒப்புக் கொண்டுள்ளார். இவர் மீதும், சங்கத்தின் மீதும் போலி பொறுப்பாளர்கள் மீதும் துறை ரீதியான மேல் நடவடிக்கையை எடுத்தால் என்ன? என பணிந்து கோருகிறோம்.

மேலும் அமைச்சருடன் உள்ள புகைப்



அமைச்சருடன் போலி பொறுப்பாளர்களுடன் ரகு மற்றும் அரசுக்கு எதிரானவர்கள். இதில் மூன்றாம் எண் ணில் உள்ள மஞ்சள் புடவையில் உள்ளவர்தான் மடல் எழுதிய சு. வைதேகி

படத்தில் 'மஞ்ச' புடவையில் மாஸ்க் அணிந்த சு.வைதேகி அவரது மடலில் இப்படித்தான் பதிவு செய்துள்ளார்.

*போக்குவரத்து துறையில் பணியிட மாறுதல் களத்தில் பணியாளர்களை துவம்சம் செய்து கொண்டிருந்த லஞ்சம் லாவண்யம் என்ற காளையை அடக்கிய வீரர் நமது போக்குவரத்து துறை பணி யாளர் ஒன்றிப்பின் தலைவர் திரு.ரகு அவர்களுக்கும் இவ்வெற்றிக்கு உறு துணையாக தலைவருடன் தோளோடு தோள் கொடுத்த நமது சங்க சேனாதி பதிகள் திரு.செந்தில்குமரன் மற்றும் திரு.முரளிதரன் ஆகியோருக்கும் சங்கத் தின் மகளிர் அணி திலகம் திருமதி இராஜசுலோசனா அவர்களுக்கும் உள்ளம் பூரித்து சந்தோசத்தில் இன்ன மும் மூர்சித்து நடந்தது கனவா , நனவா என்று இன்னமும் சுயநினைவு எட்டாமல் இன்று புதிய பதவியில் பொறுப்பேற்கும் நமது சக தோழர்கள் சார்பாகவும், அனைத்து பணியாளர்கள் சார்பாகவும் இந்த வாழ்த்து மடலை சமர்பிக்கிறேன்.*

*இந்நிலை தொடர இறைவனை வேண்டுகிறேன்.*

*இப்படிக்கு*
*சு.வைதேகி*

என வாழ்த்து மடலை எழுதி வாட்ஸ் ஆஃப் – மூலமாக வைரலாக்கியுள்ளார். மேலும் ரகுவின் தலைமை யில் அவர்களோடு உள்ள 'போலி' பொறுப்பாளர்களும், மகளிர் அணி திலகம் இராஜ சுலோசனாவும் தான் எழிலகத் தில் நடந்த ரெய்டுக்கு காரணம் என்று சொல்லாமல், லஞ்ச லாவண்ய காளையை அடக்கிய வீரர்கள் என்று கூறி ஒத்துக் கொண் டுள்ளார்.

விஜிலென்ஸ் போலிசார் எடுத்த நடவடிக்கையினை நாம் தவறு என கூற வில்லை. ஆனால் இப்படியொரு சம்பவம் எப்படி நடைபெற்றது என்பதை விளக்குவதற்காகத்தான இப்படியொரு புலனாய்வு. சங்கத்தின் தலைவர் என்ற முறையில் இவரால் சம்பாத்தியம் பண்ண முடியாமல் போனதால், இவரது உறுப்பினர்களை வைத்தே பணியிட மாறுதலுக்கும் பதவி உயர்வுக்கும் பெறும் லஞ்சம் பணத்தை அறிந்து யார், யார் எப்போது கொடுக்கப் போகிறார்கள் என்பதை அறிந்து தனது குள்ளநரித்தனத்தை காட்டி வசமாக சிக்க வைப்பதை உறுதிபடுத்தி விட்டு அன்றை மறுநாளே சங்கரன் கோவிலில் வந்து பொறுப்பேற்றுக் கொள்கிறார் ரகு .

அதே நேரத்தில் சென்னையில் இருந்து சங்கரன் கோவில் வந்த ரகுவை வரவேற்க வந்த சங்கரன்கோவில் RTO அலுவலக பணியாளர் 'சப்பை சவடால் பேர்வழி' என வாகன ஒட்டுனர் பள்ளி நிர்வாகிகள் மற்றும் RTO அலுவலக தொடர்பில் உள்ள பலராலும் அழைக்கப்படும் வெள்ளைச்சாமி, ரகுவை அழைக்க சென்ற போது இன்று STA–ல் விஜிலென்ஸ் ரெய்டு நடக்கும் என ரகு– வெள்ளைசாமியிடம் கூறிய தாக RTO வட்டார தகவல்கள் உறுதிபட கூறுகிறது.

அதே நேரத்தில் சங்கரன்கோவில் RTO

அலுவலக அஸிஸ்டெண்டான வெள்ளைச்சாமி யும் அவ்வப்போது சென்னையில் உள்ள மற்றும் தனது RTO அலுவலக நண்பர்களுடனும் தொலைத் தொடர்பு கொண்டு ஒவ்வொரு மூவ்மெண்டையும் கேட்டு தெரிந்து ரகுவின் ஆதரவாளர்களுக்கு மட்டும் செய்திகளை பகிர்ந்து கொண்டு வந்ததையும் RTO அலுவலக தரப்பில் கூறப்பட்டு வருகிறது. (இதில் குறிப்பிட கூடிய விஷயம் வெள்ளைச்சாமி 'யாதவர்' சமுதாயத்தை சேர்ந்த **வாசுதேவநல்லூரை இருப்பிடமாகக் கொண்டவர் என்பதுதான்.)**

எழிலகத்தில் மதியம் நடந்த விஜிலென்ஸ் ரெய்டு ரகுவுக்கும், வெள்ளைச்சாமிக்கும் எப்படி விடிய காலையே அதாவது ரெய்டு நடக்கும் முன்பே எப்படி தெரியும் எனவே ரெய்டு நடந்த முன்னாடியும், பின்னாடியும் உள்ள இவர்களது தொலைபேசி மற்றும் கைப்பேசி கால்களை ஆய்வு செய்து அரசுக்கு களங்கம் ஏற்படுத்தும் அளவுக்கு இவர்களது பணிகளில் நடந்த முறையற்ற தவறுகளை அறிந்து துறை ரீதியான நவடிக்கையினை இவர்கள் மீது எடுக்கப்பட வேண்டும் என்பதே நமது பணிவான கோரிக்கைகளாகும்.

மேலும், இத்தோடு சு.வைதேகி பதிவு செய்திருக்கும் மடல்கள் லஞ்சத்திற்கான எதிர்ப்பை தெரிவித்த 'மடலாக' இருந்திருப்பது மிக்க சந்தோஷம் தான். ஆனால் நீங்களும் ஒரு ஊழல் பேர்வழிதானே. ஏற்கனவே தாங்கள் தேனி RTO–ல் 2018–ல் பணியாற்றியபோது 01–11–18–ல் விஜிலென்ஸ் போலிஸிடம் சிக்கி உங்கள் மீதும் இன்று வழக்கு உள்ளதுதானே.

அதனால்தானே தற்போது பதவி உயர்வு பெற்ற முப்பது பேரில் உங்கள் பெயர் விடுபட்டு சூப்பிரண்டாக முடியாமல் ASST ஆகவே பணியை தொடர்கிறீர்கள், என்பதுநீங்கள் அறிந்ததுதானே. அப்படியிருக்கும் போது இந்த மடல் உங்களுக்கு தேவைதானா? என்ற கேள்வியை RTO தரப்பில் பலரும் கேள்வி எழுப்பி வருகின்றனர். சரி இதெல்லாம் ஒகே.

இவர் சென்னையில், இத்தனை வருட காலம் பணியாற்றிவிட்டு இப்போது நெல்லைக்கு எதற்கு? தென்காசியில் அவரது பணிகளில் நடந்த விபரங்கள் என்ன? தேனி யில் நடந்ததைதான் சு.வைதேகி மறக்க முடியுமா? சு .வைதேகி லஞ்சம் ஒழிப்பில் சிக்கி கண்ணை கசக்கினாரே அதை எப்படி அவரால் மறக்க முடிந்தது?

அன்று இவரது (லஞ்சம்) காளையை அடக்கியது விஜிலென்ஸ் டீம்தானே? இப்போது மடல் எழுதி பதிவுகளை போடும் நீங்கள் முதலில் லஞ்சம் வாங்குவதை விட்டு ஒழியுங்கள். வீர மடல்கள் எல்லாம் எதற்கு? என்றைக்குமே இவர்கள் அளிக்கும் பொய்யான புகார்கள் எல்லாம் புத்துணர்வு பெற்றுவிடாது என இவரை பற்றி நன்கு அறிந்த மோட்டார் வாகன தொடர்பில் உள்ள ஒட்டுனர் பள்ளி புரோக்கர்கள் நம்மிடம் பல செய்திகளை பதிவு செய்தனர். நாகரீகம் கருதி சில பதிவுகளை தவிர்த்துவிட்டோம்.

இனிஅடுத்தடுத்த பதிவில் நீங்களும், சங்கரன்கோவில் வெள்ளைசாமியும் லஞ்ச ஒழிப்பில் சிக்கிய கதையை பார்ப்போம்.. உங் களது தலைக்கு மேல் ஊழல்களை சுமந்திருக் கும் நீங்கள் முதலில் திருந்துங்கள் அப்புறம் மடல் எழுதுங்கள் என்று பணிந்தே கோரு கின்றோம். அரசு சம்பளமாக மக்களது வரி பணத்தை பெற்றுக் கொண்டு விடியல் ஆட்சிக்கு களங்கம் ஏற்படுத்தாதீர்கள்.

இனி தைரியம் இருந்தால் லஞ்சம் வாங்கி பாருங்கள், தொல்லையாக போய் முடியும். உங்களை நெல்லையில் உள்ள நாம் அறிந்த ஊழல் ஒழிப்பு குழுவினரே சட்ட ரீதியான ஆதாரங்களோடு சிறை பிடிக்க உரிய நடவடிக்கைக்கு முற்படுவார்கள்... இது நிஜம். திருந்துங்கள் அல்லது திருத்தப்படுவீர்கள்.

விபத்தை தடுப்போம். உயிரை காப்போம்.

(10.04.2022)


**நெல்லை கோபால்**

மூத்த பத்திரிகையாளர்

சாம்டவர், 1/771, முனுசாமி சாலை, கே.கே. நகர், சென்னை 600 078. செல்: 99944 78389